

# நாவலர் குரல்

நாவலர் புகழ் பரப்பும் நல்ல தமிழ் ஏடு

குரல்: 1 ஒலி: 5 வைகாசி 1986 05-01 விலை: ரூபா 2-00

## நாவலர் பெருமான் நினைவாக

# சைவத் தமிழ்ப் பண்பாட்டு நிலையம்

## வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் அமையும் — கல்விப் பணிப்பாளர்

"ஈழத்தில் சைவத் தமிழ்ப்பண்பாட்டை வளர்ச்சியடையச் செய்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான். நாவலர் பெருமான் வழியில் வாழ்ந்து காட்டியவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். தமிழ்ப் பேரறிஞராகிய அவர்கள் நினைவாக அவர்கள் மேற்கொண்ட சமய, இலக்கியப் பணிகளை மேற்கொள்ள வண்ணை நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் நாவலர் சைவத் தமிழ்ப் பண்பாட்டு நிலையம் அமைக்கப்பட வேண்டும்.'' இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அவர்கள் நாவலர் அறங்காவலர் குழுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய போது குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் உரையாற்றிய கல்வி அலுவலர் திரு. கு. சோமசுந்தரம் அவர்கள் தமது உரையில் பின்வருமாறு கூறினார்: ''எமது நாட்டின் பண்பாட்டுச் சிறப்பை உலகறியச் செய்தவர் கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். நாவலர் சொத்துக்கள் நாவலர் நோக்கங்களுக்குப் பயன்படவேண்டும் என்று பல தடவைகளில் எமக்கு ஆலோசனை வழங்கியவர் பண்டிதமணி. அப் பேரறிஞர் நினைவாக, கல்வித் திணைக்கள நிர்வாகத்தில் நாவலர் சைவத் தமிழ்ப் பண்பாட்டு நிலையம் ஒன்றை நாவலர் வித்தியாலய மண்டபத்தில் அமைப்பது மிகவும் பயனுள்ளதும் பொருத்தம் நிறைந்ததும் ஆகும்.''

இந்நிலையம் நாவலர் காலத்திலும் பின்னரும் இயங்கி வந்த காவிய பாடசாலைகள் என்ற மரபு வழித் தமிழ் - சைவப் பல்கலைக் கழகங்களின் வழியில் தொண்டாற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையம் மரபுவழிக் கல்விக்கான தேர்வுகளை நடத்தி வந்த ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தை மறுசீரமைத்து, அதன் வளர்ச்சிக்கு உதவும் என்றும் தமிழ், சைவம் ஆகிய துறைகளில் கல்வியும் ஆய்வும் நிகழ ஏற்பாடு செய்யும் என்றும் அறியப்படுகிறது.

ஆதரவு இன்றித் தியங்கிக் கிடக்கும் மரபுவழி உயர் கல்வி மீண்டும் புத்தெழுச்சி பெறவும் கற்பித்தலுக்கான அடிப்படைத் தகுதியாக அதனை அரசு அங்கீகரிக்கவும் இந்நிலையம் திட்டமிட்டுச் செயற்படும் என நாவலர் குரல் ஆவலோடு எதிர்பார்க்கின்றது.

(மறுபக்கம் பார்க்க)

# நாவலர் ஏற்றிய சுடரை அணையாது காப்போம்

## — நாவலர் பணிமன்றச் செயலர் உரை

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களுடைய வாழ்விலும் பேச்சிலும் எழுத்திலும் நாம் நாவலர் பெருமானை நினைவு கூர்ந்தோம். ''வாழும் நாவலர்'' என நாம் போற்றிய அப்பேரறிஞர் மறைந்துவிட்டார். பண்டிதமணி அவர்கள் நாவலர் பெருமான் போல் தனியொருவராக நின்று ஆற்றிய பல்வகைப் பணிகளை தொடரும் பொறுப்பை இன்று சைவ உலகமும் தமிழ் உலகமும் இணைந்து ஏற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாம் இன்று நாவலர் பெருமான் வாழ்ந்த காலச் சூழ்நிலையில் வாழ்கிறோம். பண்டிதமணி ஐயா ஒளிவீசச் செய்து வந்த சைவத் தமிழ் மரபு என்ற பெருவிளக்குச் சுடர் விட்டெரியச் செய்ய நாம் அனைவரும் செயற்படவேண்டும்''

இவ்வாறு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிமன்றச் செயலாளரான சைவப்புலர் மு. திருஞானசம்பந்தபிள்ளை மேற்படி மன்றச்

(மறுபக்கம் பார்க்க)

**நாவலர் சிலையே மீண்டும் வருக வருக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மறுமலர்ச்சி இயக்கப் பின்னணியில்

# நாவலர்

திரு. வி. சிவசாமி எம்.ஏ.
தலைவர், சமஸ்கிருதத்துறை,
யாழ். பல்கலைக் கழகம்

இந்திய, இலங்கை வரலாற்றில் கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு பிரதான காலமாகும். இந்நாடுகளின் சமய, பண்பாட்டு வரலாற்றில் இக்காலம் ஒரு திருப்பு முனையுமாகும். இக்காலத்திய சமய, சமூக மறுமலர்ச்சி இயக்கங்கள் பழைமையும் புதுமையும் கொண்டு விளங்கின...

நாவலர் கால இந்தியாவிலேற்பட்ட மறுமலர்ச்சி அல்லது புத்துயிர்ப்பு இயக்கங்களிலே வங்காளத்திலே தொடங்கிய பிரம்ம சமாஜம். இராமகிருஷ்ண இயக்கம், குஜாரத்திலே தொடங்கிய ஆரிய சமாஜம், என்பன குறிப்பிடற்பாலன. இவ்வியக்கங்கள் ஏற்பட்ட காலத்திலே நாவலர் பெருமளவு வாழ்ந்தாராயினும் அவற்றுடன் அவர் தொடர்பு கொண்டிருந்திலர். ஆனால், அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள், ஆற்றிய பெரும் பணிகள் ஆகியவற்றிற்கும் மேற்குறிப்பிட்ட இயக்கங்களிலே நிலவிய கருத்துக்களுக்குமிடையில் ஒற்றுமை வேற்றுமைகள் காணப்பட்டன. ஒற்றுமை அம்சங்கள், இந்நாடுகள் மேலைட்டவர் ஆட்சிக்குட்பட்டிருந்தமையினாலும் ஏறக்குறைய ஒரே விதமான பிரச்சினைகளை இவை எதிர்நோக்கியதாலும் சமகாலச் சிந்தனைகள் என்ற வகையாலும் பிறவற்றாலும் ஏற்பட்டிருக்கலாம். நாவலரைச் சமகால இந்திய மறுமலர்ச்சிப் பின்னணியிலே நோக்குதல் பொருத்தமே.

## பிரம்ம சமாஜம்.

இவ்வியக்கங்களிலே காலத்தால் முந்தியதான பிரம்ம சமாஜத்தினை முதலில் எடுத்துக்கொள்வோம் இதனை நிறுவியவரான ராம் மோகன் ராய் (1774-1833) செல்வம் படைத்த வைதீகப் பிராமண குடும்பத்திலே பிறந்தார். இளம் வயதிலேயே உண்மையினை அறியும் ஆவல் உடையவராக விளங்கினார். இந்து சமய நூல்களை மட்டுமன்றி இஸ்லாமிய, கிறித்தவ மத நூல்களையும் நன்கு ஆராய்ந்தவர்... இவர் உலகின் பிரதான மதங்களை அவற்றின் பிரதான மூல நூல்களில் ஆய்வு செய்தவர்...

இந்து சமயத்திலே சமகாலத்திலே நிலவிய மூடநம்பிக்கைகள், சீர்கேடுகள், அர்த்தமற்ற கிரிபைகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நாவலர் பெருமான் ...

(முன்பக்கத் தொடர்ச்சி)

பண்டிதமணி நாவலர் மரபின் கடைசிக் கொழுந்து என்றும் அப்போறினரோடு நாவலர் மரபு முற்றுப் பெற்றுவிட்டதென்றும் சிலர் கூறத் தலைப்பட்டுள்ளார்கள் இது மரபுவழிக் கல்விக்கு எதிரான போக்கினர் கூற்று. உண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தால்-இலக்கண வித்தகர் பட்டம் வழங்கி சிறப்பிக்கப்பட்ட பண்டிதர் இ. நமசிவாயம் போன்ற பலர் ஆழ்ந்து, அகன்ற கல்வியாளர்களாக விளங்குகிறார்கள். அவர்கள் ஆங்காங்கே மரபு வழிக் கல்வியின் சுடரை அணைந்துவிடாமற் காத்து வருகிறார்கள்.

நல்லை ஆதீனத்தில் நடைபெறும் பால பண்டித, பண்டித வகுப்புகளில் பல்கலைக் கழக கலாநிதிகளும் பேராசிரியர்களும் கலந்து கொள்வது இம்மரபு தொடரும், தொடரவேண்டும் என்ற ஆவலை வெளிக்காட்டுகிறது. நாவலர் அறங்காவலர் சபையினர் புதிய கல்விப் பணிப்பாளர் தலைமையில் புதிய உத்வேகத்தோடு, செயற்பட முன்வந்திருப்பது பாராட்டத்தக்கது. இப்பணி விரைவாகவும் உறுதியான அடித்தளத்தோடும் தொடங்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

நாவலர் சிலை மட்டுமன்றி நாவலர் நெறியும் இன்று சுயநலத்துக்குப் பலியாகி வருகின்றது. நாவலர் அறங்காவலர் குழு நாவலர் அறத்தைக் காப்பதாக.

## நாவலர் ஏற்றிய சுடரை...

(முன் பக்கத் தொடர்ச்சி)

செயற்குழுவில் பண்டிதமணி அவர்கள் நினைவாக ஆற்றிய கையறுநிலை உரையில் குறிப்பிட்டார்.

மன்றத் தலைவர் கலைமாணி, பண்டிதர் மு. கந்தையா அவர்கள் தலைமையில் மன்ற அலுவலகத்தில் மேற்படி கூட்டம் நடைபெற்றது. 'முன்யோசனை இன்றி கண நேர உணர்வுக்கு அடிமையாகி நாவலர் சபை சிலை அகற்றலை மேற்கொண்டு விட்டது. இச்செயல் தவறு என்பதை அவர்கள் உணர்ந்து வருகிறார்கள், பொதுமக்கள் ஓரணியில் திரண்டு நாவலர் பெருமான் திருப்படிமம் மீள வேண்டும் என்று கோரினல் அதனை மீண்டும் நாவலர் மணி மண்டபத்தில் நிறுவ அவர்கள் முன்வருவார்கள் என்பது உறுதி. எனவே ஈழத்தில் உள்ள சைவத் தமிழ் நிறுவனங்கள் நாவலர் பெருமான் திருப்படிமத்தை மீளக்கொண்டு வரவேண்டும் என்று கோரினல் படிமம் மீள்வது நிச்சயம். ஆகவே நிறுவனங்கள் தமது கருத்தைத் துண்டுப் பிரசுரங்களாக வெளியிட்டு மக்களுக்கு வழங்குவதோடு நாவலர் சபை, ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றுக்கும் அனுப்ப வேண்டும்' என்று தலைவர் பண்டிதர் மு. கந்தையா வேண்டுகோள் விடுத்தார்.

**நாவலர் சிலையே மீண்டும் வருக வருக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பெருமான் - 2

# குலச் சிறப்பும் பெருமான் பிறப்பும்

ஞானப்பிரகாச சுவாமிகள் என்பார் யாழ்ப் பாணத்து நல்லூரைச் சார்ந்த திருநெல்வேலியிலே தோன்றியவர். தொன்மை மிக்க பாண்டியர் மழவர் குடியைச் சார்ந்தவர். போர்ச்சுக்கேசியர் ஆட்சிக் காலத்திலே வாழ்ந்தவர். பிறந்த குடிக்கேற்பப் பழுத்த தமிழ்ப் புலமையுடையவர், சிவனை மறவாச் சிந்தையர். மழவர் என்ற சொல்லிற்குப் பொருந்த மனவலிமையும் படைத்தவர். இத்துணைச் சிறப் புடைய பெரியாரையும் போர்ச்சுக்கேசியர் தலைவன் வாளாவிருக்க விடவில்லை. அத்தலைவனின் உணவின் பொருட்டு யாழ்ப்பாணத்து மக்கள் நாடோறும் ஒவ்வொரு பசுவினைக் கொண்டு வர வேண்டும் என்று கட்டளை பிறப்பித்திருந்தான். அக் கட்டளையை மறுக்க முடியாதவர்களாய் அஞ்சியவர்கள் தம் சமய வொழுக்கத்தையும் வழுவி அதை நிறைவேற்றி வந்த னர். ஆனால், ஒழுக்கம் பழுத்த சைவ மரபிலே வந்த அடிகளார் இச் செயல் செய்ய ஒருப்படுவரோ? முதல் நாளிரவே யாருமறியா வண்ணம் வெளியேறி னார். யாழ்ப்பாணத்தினின்றும் நீங்கித் தில்லையை அடைந்தார். திருவருளை நினைந்து 'உய்ந்தேன் உய்ந்தேன்' எனச் சொல்லி மகிழ்ந்தார். என்னே இவர்தம் துணிவு! ஒழுக்கமே உயர்குலம் எனக் கருதும் இவரன்றோ உயர்ந்தவர்! திருமூலர் அருளிய திருமந்திரத்தை ஓதும் இவரோ ஆவினைக் கொன் றுண்ண உய்ப்பர். பிறவுயிர்க்கு வரும் சிறு துன்பத் தையும் தமக்கேற்பட்டதெனக் கருதும் பிறழா நோன் பினரன்றோ இவர். 'அருட் செல்வமே செல்வத்துட் செல்வம்; அஃதிலார்க்கு அவ்வுலக மில்லை' என்னும் வான் புகழ் வள்ளுவ மொழி அறிந்தவரன்றோ? ஆகவே, போர்ச்சுக்கேசியர் தலைவன் ஆணைக்கஞ்சி ஆவினைக் கொடுத்தலினும் வேற்றிடம் சென்று எத்துணை இடுக் கட்படினும் நன்றே எனக் கருதியே அவன் ஆணையை நிறைவேற்றா தொழிந்தார். ஒரு பசுவினைக் கொடுத்து மனை மக்கள் சுற்றமுடன் தாயகத்து இன்பமாக வாழத் தெரியாத பைத்தியகாரர் என்று பழிப்பவரு முளர். ஆனால், ஒழுக்கமே உயிரினும் மேலானது என்று இம்மை யின்பமெல்லாம் துறந்த இவரோ பைத்தியக்காரர்? இல்லை; உயர்ந்தவர் இவரே! இவரே தெய்வப் பிறவி! மனிதருள் மாணிக்கம்! அவர் வாழ்வு என்னவாயிற்று என்பதைக் காண்போம்.

யாழ்ப்பாணம் நீங்கிச் சிதம்பரமடைந்த ஞானப் பிரகாசர் சில ஆண்டுகள் தங்கி வாழ்ந்தபின் வட நாடு சென்றார். ஆங்கே வடமொழிப் பண்டிதர்களை அணுகிப் புலமை பெற்றார். தமிழிலும் வடமொழி யிலும் புலமை அடைந்த அவர் மீண்டும் தமிழகம் போந்தார். திருவண்ணாமலைக் குன்றக்குடி ஆதீனம் சென்று துறவு பூண்டார். அவ்வாதீனத்தின் ஆதர வில் வாழ்ந்துவரும் நாளில் செய்த சைவ சமயத் தமிழ்த் தொண்டுகள் அளப்பரியன. தமிழிலுள்ள சித்தாந்த நூல்களையும் உரைகளையும் வடமொழியிற் பதித்தார். சிவஞானசித்தியார் என்ற சமய சாத் திர நூலிற்கு நல்ல உரை வரைந்தருளினார். இன்றும் சிதம்பரத்திலுள்ள திருக்குளம் வந்தவர்க்கெல்லாம் ஞானப்பிரகாசர் திருப்பெயரைச் சொல்லா நிற்கின் றது. நன்றும் தீதும் பிறர்தர வாராவன்றே? அடிக ளாருக்குப் போர்ச்சுக்கேசியத் தலைவனால் நேர்ந்த தீங்கே நன்மையாகி முத்தியின்பம் எய்தக் காரண மாயிற்று. 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' என்ற மணிவாசகர் மாண் புறு மொழிகளே இவர்தம் வாழ்விற்கு இலக்கிய மாயின அல்லவா?



வித்துவான்
கா. மாயாண்டி பாரதி

இவர்தம் மரபு யாழ்ப்பாணத்து நல்லூரிலே பன் னெடுங்காலம் தொடர்ந்து நிலவியது. போர்ச்சுக் கேசியர் வணிகத்தில் தனியாட்சி செலுத்தினர். இதனை அறிந்த ஐரோப்பியர்களான ஆங்கிலேயரும்
(4ஆம் பக்கம் பார்க்க)

நாவலர் சிலையே மீண்டும் வருக வருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மறுமலர்ச்சி இயக்கப் பின்னணி.....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

முதலியவற்றைக் களைந்து தாம் சரியென உணர்ந்த வகையில் இவர் அதனைச் சீர்திருத்தி அமைக்க விரும்பினார். இவ்வாறு செய்வதன் மூலமே கிறித்தவத்திற்குச் சமமான அல்லது மேலான வலுவுள்ள சக்தியாக இந்து சமயம் விளங்கும் எனக் கருதினார் பகுத்தறிவும் உண்மையுமே அவர் கண்ட பெரிய இலட்சியங்கள். இந் நோக்கத்திற்கு உபநிஷதங்கள் கூறும் வேதாந்தமே சிறந்ததெனக் கருதினார் ஏக தெய்வ வழிபாட்டினை நன்கு வலியுறுத்திய இவர், உபநிடதங்கள் கூறும் நிர்க்குணப் பிரமத்தில் ஈடுபாடு கொண்டமையில் வியப்பில்லை உருவ வழிபாடு பல தெய்வ வழிபாடு முதலியவற்றைக் கண்டித்த இவருக்கு மேற்குறிப்பிட்ட உபநிஷதங்கள் கூறும் நிர்க்குணப் பிரமம் உகந்ததாகத் தென்பட்டது இவருடைய இந்நோக்கிற்குக் கிறித்தவ, இஸ்லாமியத் தொடர்புகளும் ஒரு முக்கிய காரணியாக இருந்திருக்கலாம். அதுமட்டுமன்றி, இம்மதங்களிற் போன்று ஏக தெய்வ வழிபாட்டினை நன்கு வலியுறுத்துவதன் மூலமே இந்துமதம் அவற்றிற்கு ஈடாகவும் இணையாகவும் மட்டுமன்றி மேலானதாகவும் விளங்கும் என அவர் கருதியுமிருக்கலாம். இவருடைய இக்கருத்து இவர் பாரசீக மொழியில் எழுதியுள்ள 'துஹ்வத்-உல்-முவ்ஹித்தின்' எனும் நூலிலே தெளிவாகக் காணப்படுகிறது முக்கிய உபநிடதங்களை இவர் வங்காளி மொழியிற் பெயர்த்தார். இவரின் சங்கம் முதலில் 'பிரம்ம சபா' எனவும் பின் 'பிரம்ம சமாஜம்' (கடவுளின் சங்கம்) எனவும் அழைக்கப்பட்டது...

ரோய் கிறித்தவ சமயம் பற்றி நன்கு ஆராய்ந்தவர். யூனிற்றேரியன் கிறித்தவக் கோட்பாடுகளில் இவருக்கு மிக்க ஈடுபாடேற்பட்டது. இந்து சமயத்தினை இதன் பாணியில் அமைக்க விரும்பினார் எனவும் கருதப்படுகிறது. இவர் ஏற்படுத்திய பிரம்மசமாஜத்தில் இதன் சாயலைக் காணலாம். "எனது இதயம் யூனிற்றேரிய வாதத்தில் ஈடுபடுகிறது" என இவர் கூறியிருந்தாலும் கிறித்தவத்தினை இவர் தழுவவில்லை. கிறித்தவம் பற்றித் தாம் கொண்டிருந்த கருத்துக்களை யேசுவின் வாழ்க்கை என்னும் நூலிலே வெளியிட்டார். இந்நூல் இவர் போற்றிய உபநிடத வேதாந்த அடிப்படையில் எழுதப்பட்டதாகும். இதனால், கிறித்தவக் குருமார் குறிப்பாகக் கலாநிதி மைற்லர் போன்றோர் இதனைக் கண்டித்துப் பிரசுரங்கள் வெளியிட்டனர். அவற்றை நிராகரித்து இவரும் கண்டன நூல்கள் வெளியிட்டார். தமது பிரசுரங்களை வெளியிடுவதற்காக 1823 இல் யூனிற்றேரியன் அச்சியந்திரசாலையை நிறுவினார்...

இவர் சமூகசீர்திருத்தங்களிலும் மேனாட்டுக் கல்வியிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இந்தியா தேங்கிய நிலையிலிருந்து புதிய ஊக்குவிப்புப் பெற்று உலக அரங்கிலே தலைநிமிர்ந்து விளங்குவதற்கு இந்திய சமூகத்திலே சீர் திருத்தங்களும் ஆங்கிலக் கல்வியும் அவசியமென உணர்ந்தார். 'சம்பத் கௌமுதி' எனும் பத்திரிகை மூலம் வங்காளி மொழியிலே மக்களுக்கு அரசியலறிவு புகட்டினார். சமூகத்திலே பெண்களின் நிலைகண்டு மனங் கலங்கினார். சமயகால இந்தியாவின் நிலைக்குப் பெண்களின் அவலநிலைதான் காரணம் எனக் கருதினார். 'சதி' (உடன்கட்டையேறும் வழக்கம்), பாலிய விவாகம் முதலியவற்றைக் கண்டித்தார். பெண்களின் நிலை திருந்துவதற்குப் பெண் கல்வி அவசியமென்பதை உணர்ந்து செயலாற்றினார். ஆங்கிலக் கல்வியினைப் போதிப்பதற்கு .. பேராதரவு வழங்கினார். ஆங்கிலக் கல்வி மூலமே இந்தியா மேலைத்தேய விஞ்ஞானம், காரான்மைக் கருத்துக்களைப் பெற்று முன்னேற்றமடையும் எனக் கருதினார். அதேவேளை தாய்மொழியான வங்காளமொழி வளர்ச்சிக்கும் தொண்டு புரிந்தார்.

இவர் தமது கருத்துக்களையும் விவாதங்கள் சிலவற்றையும் வங்காள மொழியிலும் பிரசுரித்தவர். இவருடைய இத் தொண்டினாலே வங்காள மொழி வளர்ச்சியுற்றதெனக் கூறப்படுகிறது. புதிய கருத்துக்களை வெளியிடும் மொழியாகவும் அது மாறியது...

சமூகத்திலே நிலவிய சாதிமுறையினை இவர் கண்டித்தார். சமத்துவத்தை வற்புறுத்தினார். ஆண்களும் பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ வேண்டுமென விரும்பினார். விதவை மறுமணத்தை ஆதரித்தார் .. கலப்புத் திருமணத்தினை இவர் ஆதரித்தமை குறிப்பிடற்பாலது.

பிரம்ம சமாஜம் 1826 இலே தொடங்கிற்று. ஆனால் இஃது ஒரு தனிப்பட்ட சமயமன்று சீர்திருத்த இயக்கமாகவே இலங்கிற்று. இவ்வியக்கம் பொதுமக்களிடையே பரவவில்லை. ஆனால் அக்கால வங்காளத்திலே வாழ்ந்த மத்திய வகுப்பு மக்களுக்குத் தேவையான சுயநம்பிக்கையினை இவ்வியக்கம் அளித்தது... பிரித்தானியர் ஆட்சியிலே ரோய்க்கு மிகுந்த நம்பிக்கையிருந்தது .. மேலைத்தேயப் பண்பாட்டின் சில அம்சங்களினால் கவரப்பட்டவராயினும் தாம் இந்திய நாட்டவர் என்பதை ரோய் மறந்திலர். தமது கருத்திற்பட்ட பகுத்தறிவு அடிப்படையிலான இந்து சமயத்தினையே அவர் விரும்பினார். இவரின் பேச்சுத்திறனும் வாதத்திறனும் குறிப்பிடற்பாலன.... (வளரும்)

நன்றி: நாவலர் நூற்றாண்டு மலர் 1979

## நாவலர் பெருமான் - 2

3ஆம் பக்கத் தொடர்ச்சி

டச்சுக்காரரும் இந்திய நாட்டிலே வணிகம் செய்யத் தொடங்கினர். கி. பி. 1600 ஆம் ஆண்டில் இங்கிலாந்து அரசியாகவிருந்த எலிசபேத்து அம்மையார் அளித்த உரிமைச் சாசனத்தின்படி நூறு ஆங்கிலேய வணிகர்கள் ஒரு வணிகக் குழுவை அமைத்தனர். இரு சாராரும் சேர்ந்து போர்த்துக்கேசியரைப் போட்டியிட்டு வென்றனர். ஆதலால், இந்தியாவில் ஏற்பட்ட மாறுதல் யாழ்ப்பாணத்திலும் உண்டாயிற்று. பதினேழாம் நூற்றாண்டில் போர்த்துக்கேசியரின் ஆட்சி நீங்கி, டச்சுக்காரரின் ஆட்சி நிலவியது. இவர்களும் வணிகத்துடனும் தம் சமயத்தைப் பரப்புவதிலேயே மிகவும் கருத்தைச் செலுத்தினர். டச்சுக்காரர் காலத்திலும் பிற சமயத்தினர் தங்கள் உரிமையோடு வாழ முடியவில்லை. இந்தக் காலத்தில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி நடந்தது. அதுவே நம் ஞானபிரகாசர் மரபு மீண்டும் தழைத்தோங்கக் காரணமாயிற்று. அந்நிகழ்ச்சி யாது? (வளரும்)

நன்றி: நாவலர் பெருமான்
பழனியப்பா பிரதர்ஸ்,
சென்னை.

நாவலர் சிலையே மீண்டும் வருக வருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தனும் ஆறுமுகநாவலரும்

— திரு. க. இளையதம்பி —

இன்று நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிருக்குமிடம் தமிழ் மன்னர்களின் காலத்திற் படை வீரர்களாகப் பணிபுரிய வந்த முஸ்லிம் வீரர்களின் உறைவிடமாக இருந்தது. தமிழ் மன்னர்களின் வலிகுன்றி அரசு தளர்ந்தொழிய அவர்களை அண்டிப்பிழைத்த முஸ்லிம் படை வீரர்கள் தொழிலுக்காக இடம் பெயர்ந்தனர். அங்கு வசித்தவர்கள் சிலரின் சமாதிகள் மட்டும் இடம்பெற்று, கால மாற்றத்தால் வெறிச்சோடிக் கிடந்தது அவ்விடம்.

இந்நிலையிற்றான் மட்டுவில் என்ற ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம் கச்சேரியில் சிறுப்பராகக் கடமை புரிந்தவருமான இரகுநாத மாப்பாணர் என்பவர் அவ்வெறு நிலத்துக்கு அரசினரிடமிருந்து உரிமை பெற்றுக் கந்தசுவாமி கோயிலொன்றை அமைப்பதற்கு முதலில் ஒருசிறு கோயிலாகக் கட்டித் தமது முகாமையில் கண்காணித்து வந்தார். இது பற்றி முதலியார் குல.சபாநாதன் அவர்களால் எழுதி வெளிவந்த **இலங்கையின் புராதன சைவாலயங்கள்** என்ற நூலிற் காணலாம். (1971, பக். 26.)

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் சிறப்பாகக் கடமையாற்றி வந்த தொன் ஜூவான் மாப்பாண முதலியார் தமது பதவி காரணமாக இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி கி. பி. 1734 ஆம் ஆண்டளவில் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை மீண்டும் கட்டுவதற்கு உத்தரவு பெற்றார். கிருஷ்ணையர் — சுப்பையர் என்பவரே அக் கோயிலின் முதற் பூசகராக இருந்தார்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மஹா மண்டபத்துக் கீழைச் சுவரிலே மேற்கு முகமாக இக் கோயில் தாபகராகிய இரகுநாத மாப்பாணர் பிரதிமையும் அவர் மனைவி பிரதிமையும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை இன்றும் பார்க்க முடியும். ஆண்டு தோறும் தை மாசத்தில் தைப்பூசத்திற்கு முதல் நாளாகிய புனர்பூசத்தன்று புதிதுண்ணுந் தினத்திலே கோயிலிற் படைக்கப்பட்ட புதிரமுது இப்பிரதிமைகள் முன்னும் படைக்கப் பெற்று வழிபாடு நடைபெற்று வருகிறது.

நல்லவர்கள் செய்தவப் பயன் காரணமாய், 19 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் ஞான ஞாயிறாகிய ஆறுமுக நாவலர் தோன்றி அதுவரை சைவ சமயத்தைக் கவிந்து கொண்டு, இரண்டு நூற்றாண்டு காலமாய் நின்று நிலவிய அறியாமை என்ற இருளைப் போக்கியதோடு, அவர் காலத்தில் கந்தசுவாமி கோவிலைக் கண்காணித்து வந்த முதலாளியையும் வழிப்படுத்தி ஆடு, கோழி பலி, தேவடியாள் ஆட்டம், வாண வேடிக்கை என்ற அநாகரிகச் செயல்களையும் ஒழித்துக் கட்டச் செய்தார்.

மேலும் தமது பெயரில் இடம் பெற்றிருந்த நல்லூர்ச் சைவப் பிரகாச மடாலய வளவில் தேவார திருவாசக பாராயணஞ் செய்வதற்கும் குருபூஜை, மகேசுர பூஜை என்பன தடையில்லாமல் நடைபெறுவதற்கும் சம்பந்தப்பட்டோர் தங்கி இருப்பதற்கெனக் கருங்கல்லால் ஒரு மடத்தை உருவாக்கக் கோவில் முதலாளியை இணங்க வைத்தார். மடம் கட்டுதற்குரிய கருங்கற்களும் கொண்டு வந்து பறிக்கப்பட்டு அமைப்பிற்குரிய ஆயத்தங்கள் செய்யப்பட்டன.

யமுனரிக்கு அணித்தாக (முன்பு) அமைந்திருந்த கந்தசுவாமி கோயிலின் வாயிலாக மக்களுக்குக் கிடைத்து வந்த முருகன் திருவருள் மீண்டுங் குறைவிலாது கிடைப்பதற்குரிய முறையில் ஆகமமுறைப்படி கோயிலைப்புனரமைப்புச் செய்வதற்கும் கோயில் முதலாளியை ஒருப்பட வைத்தார்.

நாவலர் பெருமானின் அறிவுரையைச் சிரமேற்கொண்டு சைவ அறநெறி வழிநின்ற கோயில் முதலாளியின் தருமத்தைப் புரிந்து கொள்ள முடியாத போலிகள் சிலர் தமது வருவாய்க்கு வந்த தாக்கத்தை எண்ணி நாவலரின் சேவைகளைக் குறுகிய நோக்கோடு பார்த்து அன்னவரின் பெருநெறியைப் புரிய முடியாதவர்களாய் நாவலரையும் முதலாளியையும் பிரிப்பதற்குரிய சூழ்ச்சிகளைச் செய்வாராயினர். அதில் தற்காலிக வெற்றியுங் கண்டனர்.

ஆனால், ஆறுமுக நாவலர் அவர்கள் மீண்டும் சைவப்பிரகாச மடாலய வளவில் சிலையுருவில் எழுந்தருளி அறிவுரை வழங்குவதை மேற்கொண்டுள்ளார்கள்

நன்றி: தினகரன், 8 - 10 - 1971

நல்லூர்க் கந்தசுவாமியார் பேரிலும் அவர் கோயிலின் சார்பிலும் நாவலர்க்கிருந்த ஈடுபாடு அம்மட்டிம்மட்டென்னும் அளவினதல்ல. இக் கட்டுரை அதற்கு விளக்கந் தருகின்றது. நல்லூர்க் கந்தசுவாமி கோயிற் பிரதிஷ்டைக்கென நாவலர் இந்தியாவிலிருந்து தருவித்த சிலா மூர்த்தங்களின் செய்தி நாவலர் குரல் ஒலி 4 இல் வெளி வந்துள்ளது. திருவாவடுதுறையிலிருந்து ஓதுவார் மூர்த்திகளை வரவழைத்துத் தமது செலவிற் பராமரித்துச் சைவப்பிரகாச மடாலய வளவில் அமர்த்தி மகேசுவரபூசையும் திருவிழாத் திருவீதிப் பஜனையும் நாவலரே செய்வித்த செய்தியும் பிரசித்தம்.

( 8 ஆம் பக்கம் பார்க்க

நாவலர் சிலையே மீண்டும் வருக வருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம்பனை இராசாத்திக்குப் பல்லுக் குத்த ஈர்க்கில்லையாகுமா?

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஐயாவுக்கு இலங்கையிலும் இந்தியாவிலும் ஆயிரம் ஆயிரம் அபிமானிகள். ஏன் அதிகம்? இங்கு யாழ்ப்பாணத்தில் மட்டும் இருபத்தாறு நேர்முக மாணவர்களாம். தனித்தனி பெயர் சுட்டி விரிதலெழுதிக் காட்டியிருக்கிறார்கள் வித்துவான்கள். இந்த இருபத்தாறும் ஒன்று நாலாய் விரிந்திருந்தாலுமே ஒரு தலைமுறையில் நூற்றுக்கு மேலாகுமே! நாவலர் பெருமானது குருத்துவப் பணிக்குக் குறைந்பட்ச முன் எல்லையாக 1840 ஐக் கொண்டாலுமே இதுவரை மூன்று தலைமுறை ஓடி மறைந்திருக்கிறதே! இம் மூன்று தலைமுறையிலும் அவர் கல்விப் பரம்பரையிற் கிளைத்துப் பரந்த தொகை எவ்வளவிருக்கும்! அவர் நேர்முக மாணவர் வழியில் ஸ்ரீமான சதாசிவம்பிள்ளை வழி, ஸ்ரீமான் பொனனம்பலபிள்ளை வழி, ஸ்ரீமான் கைலாசபிள்ளை வழி மூன்றும் பிரபல்யமானவையன்றோ!

**"ஆறுமுக ஐயற்கே ஆட்செய்யப் பெற்றனம் யாம் வேறறங்கள் வேண்டா இனி"** என்ற உள்ளவிறும் வெறுக்கையும் ஸ்ரீமான் பொன்னம்பல பிள்ளைக் கிருநத பரிசில் மற்றெவர்க்கும் இல்லாமலிருந்ததாகச் சொல்லலாமோ! நாவலரைப் பெயர் சுட்டிக் கூறுதலே அபசாரமாமென அஞ்சி 'குரு' எனக் கூறுதற்கே அறிமடங் கொண்டு நாணி 'அவர்கள்' என்றே ஆசார பூர்வமாக அழைத்து வந்த ஸ்ரீமான் கைலாசபின்ளை வழி விளங்க நீடு வாழ்ந்து—நனவினுங் கனவினும் நாவலர் நினைவு மயமாகவே திகழ்ந்து—நாவலர் பரம்பரையென்ற நற்பண்புக்குப் பொருந்த நைஷ்டிகப் பிரமச்சாரியாவே இருந்து—சமீபத்தில் மறைந்த பண்டிதமணி அவர்களுக்கு ஆயிரம் ஆயிரம் அபிமானிகள் உண்டே. அவர் வாரிப்பொழிநத நாவலர் உணர்வில் நனைந்தூறி மலர்ந்த ஆசிரிய மாணவர் ஆயிரத்கறு நூற்றுவர் என்கின்றார் அன்பரொருவர். அத்தனை பேரினதும் அறிவொளியில் தோய்ந்த மாணவர் தொகை இத்தனை நாளும் அநேகாநேகம் ஆகுமே! அவர்களில் ஆசிரியத்துவமே பெற்றுள்ளாரும் அநேகானேகம் ஆகுமே!

இனி, நாவலர் தர்மத்தையே வழி வழித் தொடர அமைந்த சைவபரிபாலன சபை, விவேகானந்தசபை, கண்டிச் சைவ மஹாசபை, ஊருக்கூர் விளங்கும் இந்து சமய விருத்தி, சைவசமய விருத்திச் சங்கங்கள எத்தனையோ பல உளவே. ஆறுமுக நாவலர் அற பரிபாலன சபையும் உள்ளதே! இவையெல்லாஞ் சொல்லுவதென்ன? இந்த இராசாத்தி ஆயிரம்பனை இராசாத்தி என்பதையே. ஆக, இந்த இராசாத்தியின் மகிமைக்கு எந்த ஒரு குறையும் இங்குத் தக்கவைக்க ஏது வில்லை என்பது யதார்த்தமாகாதென்பதற்கில்லை.




இத்தனை பேர்களும் இத்தனை ஸ்தாபனங்களும் தலைக்கொரு குரல் மட்டுங் கிளப்பினாலே நாவலர் மகிமைக்கு நேர்ந்துள்ள நவீன அவமதிப்பு இதுவரை நாணித்தலை குனிந்து விட்டு விலகியிருக்குமே! நாவலர் பேரில் தற்போது நடக்கும் நவீன நாடகத்து வில்லன்கள் விலவிலத்திருப்பார்களே! நாவலரைத் திருப்படிமம் நல்லை மணிமண்டபத்தை நாடி மீண்டிருக்குமே!

இப்பவுந்தான் காலங் கடந்து விடவில்லை. நல்லது செய்ய நாளுங் கோளும் பார்ப்பானேன்? நல்லூரான் தென்வீதி மணிமண்டபம்—நாவலர் பிரான் கொலுமண்டபம்—நாயக்கர் காலச் சிற்ப நவமணி மண்டபம்—இதற்குமுன் நாடுகண்டறியாத நாகரிகக் கலை மண்டபம்—தன் நிலையிழக்குஞ்சார்பு நேர்வதற்கு முன்னே ஆவனசெய்ய அணிதிரள்க. எல்லாத் தனியார்களும் எல்லாத் தாபனங்களும் ஓரணியாய்த் திரண்டெழுக. நாவலரைத் திருப்படிமம் மீள வழி செய்க. இத்தொடர்பில் ஏலவே வீரகேசரி மூலம் வெளிவந்த தனியார் சிலர் அறிக்கைகளையும் கலாநிதி க. சிற்றம்பலம், கலாநிதி பூலோகசிங்கம் போல்வார் சிலர் விசேஷ கட்டுரைகளையும் யாழ். சைவ பரிபாலனசபை, கொழும்பு விவேகானந்தசபை, கொழும்பு இந்து வாலிபர் சங்கம் என்பவற்றின் அறிக்கைகளையும் **நாவலர் குரல்** வரவேற்றுப் போற்றி வெளியிட்டுள்ளது. இதே பாங்கில் வெளியான மற்றும் சங்க அறிக்கைகளில் ஏழாலை, காரைநகர் சார்ந்த நான்கு அறிக்கைகள் ஏலவே **நாவலர் குரலில்** வெளிவரப் பெற்றிருத்தல் கண்

( 11ஆம் பக்கம் பார்க்க )

**நாவலர் சிலையே மீண்டும் வருக வருக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதும் நறியதும் - 1

# ஆன்மார்த்தமும் பரார்த்தமும்

ஆன்மா + அர்த்தம் = ஆன்மார்த்தம். பர + அர்த்தம் = பரார்த்தம். ஆன்மா — தான். அர்த்தம் — பொருட்டு. ஆன்மார்த்தம் — தன் பொருட்டு. பர — பிறர். பரார்த்தம் — பிறர் பொருட்டு. ஆன்மார்த்தம், பரார்த்தம் என்ற தொடர்களின் பதப் பொருள் விநியோகம் இது.

பூஜை விஷயத்தில் இத்தொடர்கள் சேர்ந்து வரும் போது ஆன்மார்த்த பூஜை, பரார்த்த பூஜை என்றாகும். பதப் பொருள் விநியோகப்படி இவற்றைத் தன் பொருட்டுப் பூஜை, பிறர் பொருட்டுப் பூஜை என அர்த்தம் பண்ணி விடலாம். ஆனால், பூஜை இலக்கணத்தைப் பொறுத்த வகையில் இது பற்றாக் குறை விளக்கமாகும்.

பூஜையின் பிரதான நோக்கம் ஆன்ம நிவேதனம் எனப்படும். நிவேதனமாவது பூஜிப்பவர் பூஜிக்கப்படும் மூர்த்தியில் தன்னை அர்ப்பித்தலாகும். எனவே. பரார்த்த பூஜையிலும் பூஜைப் பண்பு இதுவாகவே யிருந்தாக வேண்டும். எனில். ஆன்மார்த்த பூஜை, பரார்த்த பூஜை எனப் பெயர் வேறுபாடு ஏற்பட்டதேன்? என்பது நியாயமான ஆசங்கையே. அதற்குப் பொருத்தமான விளக்கம் பின்வருமாறு;

பூஜகர் ஒருவர் தான் மட்டும் தன்பாட்டில் சங்கற்பம், தியானம், அக்கினி காரியம், நைவேத்தியம், தீபாராதனை முதலியன செய்கையில் அது ஆன்மார்த்த பூஜை. அதே பூஜகர் எஜமான் என்ற பெயரிலோ, உபயகாரன் என்ற பெயரிலோ தன்னுடன் பிறரையுந் தொடர்பு படுத்திக் கொண்டு சங்கற்பம், தியானம் முதலாயின செய்கையில் அது பரார்த்த பூஜை. ஆகவே பரார்த்த பூஜை என்பது ஒருவர் பிறருக்காகச் செய்யும் பூஜையல்ல. ஒருவர் பிறரையுந் தன்னோடு தொடர்புபடுத்திக் கொண்டு செய்யும் பூஜை என்பதே பொருத்தமான விளக்கமாகும்.

ஒருவர் குரு முகமாக விசேட தீக்ஷை பெற்று, குருவின் கையால் சிவலிங்கம் எழுந்தருளச் செய்வித்துக் கொண்டு தான் தன்பாட்டில் நிகழ்த்துவது ஆன்மார்த்த பூஜை. ஆலய பூஜைகளில் பிறருஞ் சம்பந்தப்படுமாறு உரிய முறையால் அவர்களையுந் தொடர்புபடுத்திக்கொண்டு செய்யும் பூஜை பரார்த்த பூஜை என்ற விளக்கம் இன்றியமையாத ஒன்றாகும்.

ஆலய பூஜைகளில் முதலாவது கிரியை சங்கற்பம். சங்கற்பத்தின் போது பூசகர் உபயகாரனுக்கும் பூணூல் சூட்டுகிறார், தர்ப்பைக் கட்டொன்றைத் தன் தொடைக்குக் கீழ் வைத்து அதன் நுதி உபயகாரனில் ஓட்டும்படி செய்து கொள்கிறார். சங்கற்பத்தில் தான் செய்வதெல்லாம் (பவித்திரம் பூணுதல், தலையிற் சூட்டுதல், வலது முழங்காலில் பவித்திரகை மேலும் மற்றக்கை கீழுமாக அமைய வைத்தல் முதலியன) உபயகாரனுஞ் செய்ய வைக்கிறார். ...... 'பூஜாம அஹம் அதய கரிஷ்யே' — 'பூசையை நான் இன்று செய்வேன்' எனச் சொல்லிச் சங்கற்பப் பிரகடனத்தை முடிக்கையில் தாம் செய்வது போலவே உபயகாரனும் கையிற் கொண்ட தர்ப்பையையும் மலர்களையும் கீழே போடச் செய்கிறார். பூசைத் திரவியம், ஓமத் திரவியம் எல்லாம் உபயகாரனைக் கொண்டு தொடுவித்த பின்னரே தாம் கையாளுகிறார். அக்கினி காரியம் முடிக்கும் போது பூர்ணாகுதியில் உபயகாரனும் தன் கையால் தேங்காய், பழமிட்டுக் கலந்து கொள்ள வைக்கிறார். பரார்த்த பூஜை என்பது பிறரைத் தொடர்பு படுத்திச் செய்யப் படுவது என்பதற்கான அத்தாட்சிகள் இவை பரார்த்த பூஜையைப் பூசகர் உபயகாரன் சார்பிற் செய்கிறார். அதேவேளை உபயகாரன் பூஜகர் மூலந் தானே பூசை செய்கிறார் என்ற நிலை இதில் அமைந்திருக்கின்றது.

மனித காரியங்களில் மூன்று விஷயங்கள் தானே செய்தாக வேண்டியவை என்பது நீதி சாஸ்திரக் கருத்து.

> "ஆச்ரிதானாம் ப்ருதௌ சுவாமி சேவாயாம்
> புத்ரஸ்ய உத்பாதனே ச
> நாபேக்ஷ்யதே ப்ரதஹஸ்தகா'

தன்னை அண்டிய அதிதியை உபசரித்தல். சுவாமியைப் பூஜித்தல், புத்திர உற்பத்தி என்ற மூன்றிலும் பிறர்கையை எதிர்பார்க்கும் நிலை இல்லை என்பது நீதி. அதன்படி, எப்படியும் தான் செய்வதே பூஜை. அஃதில்லாதபோது பூஜை இலக்கணமான ஆன்ம நிவேதனம் பூஜையில் அமையாது. இந்த உண்மையின் அடிப்படையாகவே பரார்த்த பூஜைப் பணியும் அமைகிறது.

கிரியை சம்பந்தப்பட்ட ஆலய பூஜையில் விசேட ஆற்றலும் விசேட பலனும் விளைய இடமுண்டு. அதற்கேதுவாக அதில் இடம்பெறும் மந்திர, கிரியா பாவனைகள் எழுந்தமானத்துக்கு எல்லோராலும் இயலக் கூடுவன அல்ல. அந் நோக்கிலேயே நம்போல்வார் பூஜகர் மூலம் பூஜை செய்து கொள்ளும் —செய்வித்துக் கொள்வதல்ல- முறையான பரார்த்த பூஜைமுறை நடைமுறையில் இருந்து வருகிறது. இதில் ஐயர்

( 11 ஆம் பக்கம் பார்க்க )

நாவலர் சிலையே மீண்டும் வருக வருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரான் தென் வீதிக்கே நாவலர்பிரான் சிலை வரவேண்டும்

## இளவாலை காடிவளை சைவ இளைஞர் சங்கம கோரிக்கை

சைவ சமயாசாரியர்களாகிய நால்வர் பெருமக்களுக்குப் பின், பெரியபுராணம் புகழ்ந்தோதும் அறுபத்து மூவர் நாயன்மார்களுக்குப் பின், சைவத் தமிழ் நிலத்தில் சைவத் தொண்டர் என்ற பெயர்க்குரியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். ஆம்! ஒருதலையாக-நிச்சயமாக-அவர் சைவத் தொண்டரே. அவர் செய்த தமிழ்த் தொண்டு, கல்வித் தொண்டு, சமூகத் தொண்டு என்ற வகையினவும் சமய நோக்கில், சமய அடிப்படையில், சமய விருத்திக்கு அநுசரணையாம் பண்பில் அமைந்திருந்தமை கண்கூடு. ஒட்டுமொத்தமான நோக்கில் முற்ற முடிய அவர் சைவத் தொண்டரேயாம். நாவலர் என்ற சிறப்புப் பெயர் காரண இடுகுறியாக அவர்க்கே பொருந்தும் என்பதெவ்வாறோ, சைவத் தொண்டர் என்ற சிறப்பும் காரண இடுகுறியாக அவர்க்கே பொருந்துதலும் அவ்வாறேயாம்.

'தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்ற ஔவையார் 'இறைவனோ தொண்டர் உள்ளத் தொடுக்கம்' என அதற்குக் காரண விளக்கமும் கையோடே தந்துள்ளார். அதிகம் பேசுவானேன்! தொண்டர் உள்ளத்தொடுங்கும் இறைவன் தொண்டர் திருவுருவச் சிலையொன்றைத் தன் வீதியிற் காணச் சகிக்க மாட்டான் என்று சொல்லி நம்மை நாம் ஏமாற்றிக் கொண்டு அமைதியுறுவதானால், ஔவைப்பிராட்டியின் அநுபவ ஞானத்தையும் மிஞ்சிவிட்டதா நமது அறிவியற் பிரபாவம்? என்றெழும் ஆசங்கை தவிர்க்க முடியாத ஒன்றாகும். எனவே நல்லூர் வீதியில் ஒரு ஒதுக்கில் நாவலர் பெருமான் சிலை இருத்தல் ஆலயத்தில் நல்லூர்ப் பெருமான் வீற்றிருத்தற்குத் தடையாகும் என்பது பள்ளத்தில் நின்று ஆட்டுக்குட்டி தண்ணீர் குடித்தல் மேட்டில் நின்ற ஓநாய் தண்ணீர் குடித்தலுக்குத் தடையாகும் என்பதுபோல் வெறுவிந்தையாய் முடியும்.

மதுரை மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் கோயில் உட்பிரகாரத்தில் கோயில் திருப்பணிக்குதவிய பாண்டிய மன்னர் சிலைகள், குஜராத் மாநிலத்தில் உள்ள 'சோமநாத்' ஆலயமுன்றலில் அக்கோயிற் புனருத்தாரண கர்த்தாவாகிய பட்டேல் திருவுருவச் சிலை, அரசப் பெரியார்கள் ஆலய உட்பிரகாரத்திலும் அரசியற் பெரியார் ஆலய முன்றலிலும் இருப்பது சுவாமி சம்மதமாயிருக்கையில், பிரசித்தி பெற்ற சமயப் பெரியார், சைவத் தொண்டர், நைஷ்டிகப் பிரமச்சாரி நாவலர் பெருமான் சிலை நல்லூர்ப் புறவீதியில் இருப்பதற்குச் சுவாமி சம்மதமில்லை என்று சொல்லுவார் சொன்னாலும் கேட்பாருக்கு மதியென்ன? என்று கேட்கத் தோன்றுகின்றது. (இரகுநாத மாப்பாணர் தம்பதிகள் சிலை உள் வீதியில். அது பகிரங்க இரகசியம்.)

இவ்வுண்மை வழிநின்று நாவலர் பெருமான் சிலை முன்னிருந்த இடத்துக்கு மீள்வதற்கு ஆவன செய்யச் சைவ ஸ்தாபனங்களனைத்தும் ஒருங்கொத்துக் கிளர்ந்தெழ வேண்டுகிறோம்.

---

## நல்லூர்க் கந்தனும்....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**அவர் சுவாமியையோ கோயிலையோ என்றும் விரோதித்ததில்லை. அதற்குப் பதில் அவற்றின் ஆக்கப் பொறுதியை அதிகரிக்கச் செய்வதற்கே அரும்பாடு பட்டார்.** கோயிற் கட்டிடத்தைப் புனரமைக்க வேண்டி நாவலர் தென்னிந்தியக் கருவூரிலிருந்து திறமான கருங்கற்களைத் தெரிந்து தருவித்த செய்தியும் வேறே உண்டல்லவா! நாவலர், சுவாமியையோ கோயிலையோ அல்ல நிர்வாகத்தினரையுமல்ல நிர்வாக ஒழுங்கீனங்களையே, நிர்வாகப் பழிகேடுகள் பழுதுகளையே விரோதித்தார். அது ஒன்றும் வீண் போனதில்லை. பலி வழக்கம், தாசி நடனம், வாணவேடிக்கை முதலாம் வழங்கா வழக்குகள் கோயில் வளாகத்தை விட்டு நடையைக் கட்டின.

செல்லப்ப சுவாமி போன்ற மெய்ஞ்ஞான மேதைகளின் கவனத்தை ஈர்க்குமளவிற்குக் கோயில் விளக்கம் மேலோங்கிற்று. இப்போதைய இந்த நிர்வாகம் மட்டுமல்ல இனி வரும் எக்காலத்தைய எந்த நிர்வாகமும் இப்பெரு நன்மையைக் கருத்திற் கொண்டு நாவலர் பெருமானுக்கு நன்றிக் கடப்பாடு பூண்டொழுக வேண்டும் அவசியமுண்டு.

திரு இளையதம்பி இக்கட்டுரை முடிவாகக் கூறிய கருத்தையே அமரர் பண்டிதமணியவர்களும் நாவலர் சிலை சடத்தல் சார்பான தமது அறிக்கையிற் குறிப்பிட்டுள்ளார்கள். வான் சார்ந்த பெருந்தகைகளாகிய இவ்விருவரினதும் ஆத்மிக சக்திகள் **நாவலர் குரலை** வாழ்விக்கட்டும்.

— ஆசிரியர்

---

**நாவலர் சிலையே மீண்டும் வருக வருக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தும் பித்தும்

## சைவத்தில் அதன் நிலை

### ஒரு செய்தி!

பங்காரு அடிகள் என்ற புனைபெயருள்ள ஒருவர் செவ்வாய், வெள்ளி, ஞாயிறு வாரங்களில் ஒரு ஆதிபராசக்தி சிலையின் முன் கண்மூடி உட்கார்ந்து கொள்கிறார். உடனடியாகவே அவர் தேவிவாக்கை வசனிப்பவராய் விடுகிறார். ஆயிரக்கணக்கானோர் தேவிவாக்கைக் கேட்டுவிட்டார்கள். லட்சக்கணக்கானோர் அதைப் பின்பற்றுகிறார்கள். ஆண்டிகள் முதல் அரசியலாளர்வரை தம் சார்பிலான முக்கால நிகழ்ச்சிகளைத் தேவி வாக்காகக் கேட்டுவிட முண்டியடித்துக் கொண்டு கியூ பண்ணி நிற்பது வழக்கமாய் விட்டது. இன மத வேறுபாடின்றி எல்லாருங் குழுமுகிறார்கள். எத்தனையோ பலர் அபிலாஷைகள் நிறைவுற்றிருப்பதாகவும் தீராநோய்கள் தீர்ந்திருப்பதாகவும், மலடிகள் பலர் மகப்பேறுற்றுள்ளதாகவும் செய்தி. வெகுமதிகள் பெருமளவிற் குவிகின்றன. அப்பொருள் கொண்டு இருபது ஏக்கர் விஸ்தீரணமான வெற்றுநிலம், பாடசாலை, வைத்தியசாலை, தொழிற்சாலைகள் பல்கிய நகரமாய் உருமாறுகின்றது.

சென்னைக்குத் தெற்கே 23 மைல் தூரத்திற் பிரதான வீதியில் உள்ள 'மெலமறுவத்தூர்' என்ற ஊரில் இது நிகழ்கிறது. குறிப்பிட்ட ஸ்தானத்துக்கு ஆதிபராசக்திபீடம் என்று பெயர் வழங்குகிறது. 1970 இல் ஆரம்பித்த இப் பீடத்துக்கு இதுவரை 1500 கிளைநிலையங்களுந் தோற்றிவிட்டனவாம். குறித்த பங்காரு அடிகள் 41 வயசான ஒரு பாடசாலை ஆசிரியர். நான்கு பிள்ளைகளைக் கொண்ட குடும்பஸ்தர். தேவியால் அதிட்டிக்கப்படாத வேளைகளில் சாதாரண ஒரு மனிதனாகவே காட்சியளிப்பார். பராசத்திபீட நிர்வாகம் அவரை ஆசிரியத் தொழில் செய்யாமல் தடுத்து வைத்து மாதச் சம்பளம் கொடுத்து வருகிறது. வானில் விடப்படும் உபக்கிரகம் (Communication Satellite) திடீரென ஒருநாள் விழுவது போலத், தனது வித்தையும் திடீரென ஒருநாள் நின்றுவிடுமென, அவரே சொல்லியுங் கொள்கின்றார்,

நம்பிக்கையானவர்களிடம் புலன்விசாரணை செய்கின்றபோது அது உண்மையான பராசக்தி திருவருட் பிரவாகம் என்கின்றனர் சிலர், பங்காரு அடிகள் ஒரு சந்நியாசியிடம் பெற்ற மந்திர வித்தை மாண்பினால் இது செய்து கொண்டிருக்கிறார் என்கின்றார்கள் சிலர் சென்று திரளுந் தொகையில் பெண்களே பெரும் பான்மையாம். உத்தியோகஸ்தர், அரசியலாளர்களின் பெண்களே அதிகம் எனவும் பேசிக்கொள்ளப்படுகிறது. பங்காரு சொல்வன எல்லாம் சித்தியாவதில்லை. பார்க்கிற உத்தியோகத்திலிருந்து விலகினால் பெரியபதவி கிடைக்கும் என்ற பராசக்தி வாக்குக் கேட்டு வேலையை இராஜினாமாச் செய்தவர் சிலர் வாய்த் தவிடும்போய் அடுப்பு நெருப்புமிழந்தவள் போலத் தவிக்கிறார்களாம். ஒருவர், அதற்கெதிர் ரஜீவ் மந்திரிசபையில் உயர் பதவியும் பெற்றுள்ளாராம். பங்காரு அடிகளின் சித்து மகிமை சாயிபாபாவின் மகிமையையுந் தலை தட்டிவிட்டதாகவும் பேசிக்கொள்ளப்படுகின்றதாம்.

### மற்றொரு செய்தி

பதினாறு வருடங்களுக்கு முன் நாம் அறுபத்தைந்துபேர் காஞ்சிபுரம் சிருங்கேரி சங்கராசாரியரைச் சந்தித்து ஆசிபெற்றுக்கொண்டு திண்டுக்கல்லில் அன்று புகழ் வாய்ந்திருந்த ஒரு சித்தரைத் தரிசிக்கச் சென்றோம். அங்கிருந்த கற்பாறைப் பாங்கான ஆசிரமத்தில் நாம் உட்கார்ந்தோம், 60 வயசுப் பிராயமுள்ள ஒரு புண்ணிய புருஷர் வெள்ளுடையும் நரைமயிருமாக எம்முன் தோன்றினார். அவர் எங்களை ஒவ்வொருவராகக் கிட்ட அழைத்து, குண நடை வாழ்க்கை முறைகளைப்பற்றி ஓரளவு சரியான விபரங்களைத் தெரிவித்தார். அப்போது பையனொருவன் பெரியதொரு புதுப் பூமாலையைக் கொண்டு வந்தான். எங்களுக்கு முன்னால் சற்று எட்ட நின்று கொண்டு அவர் அந்த மாலையை வாங்கித் தமது இரண்டு கைகளாலுங் கசக்கினார். அப்பொழுது அதிலிருந்து வெள்ளைச் சீனி கீழே கொட்டுண்ணுவதைக் கண்ணெதிரே கண்டோம் பின்பு, அவர் என்னைக் கிட்ட அழைத்து என் உள்ளங்கைகளைச் சேர்த்துப் பிடிக்கச் சொல்லிவிட்டு முன்போலவே மாலையைக் கசக்கினார். என்கையில் சீனி உதிர்ந்தது. அவர்சொற்படி அதைவாயிலிட்டபோது அச்சீனி இனிமையிலும் மேலான ஒரு இனிமையுணர்வு என்னுள்ளூரப் பாந்தது, அவர் மாலையைக் கசக்கும் போது ஒருவித்தியாசமான சத்தம் எழுவதையும் அவதானிக்கக் கூடியதாயிருந்தது. அதனால், பார்வையைக் கொஞ்சம் கூர்மைப்படுத்திப் பூவிதழ்களின் ஊடாக உற்று நோக்கினேன் தவிட்டு நிறமான ஒரு கடதாசிப் பையிலிருந்து சீனி உதிர்வதை அவதானித்தேன். சித்தின் பேரில் இப்படியான வஞ்சனை விளையாட்டுக்களும் இருப்பதை அறிந்து கொண்டேன்.

குறித்த இரு செய்திகளும் 1-11-85 இல் வெளியான **இந்துசமயத்தின் இன்றைய நிலை** (Hinduism Today) என்ற ஹவாய் சைவாதீனப் பத்திரிகையில் கண்டவை.

மனித அறிவாற்றலின் அதி உயர்மட்டத்துக்கும் மேலானவை என்று கருதக்கூடிய நிகழ்ச்சிகளைச் சித்து என்ற பெயரால் வழங்குவதும் பொதுசனம் அதிற் பித்தேறி உழல்வதும் என்றுமுள்ள செய்திகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையில் இளநீரை அடித்துடைத்தல் முதல் கலியாண மாப்பிள்ளைக்குக கையை மேல் நீட்டி இலவசத் தாலிக்கொடி வரவழைத்துக் கொடுத்தல் ஈறாக எத்தனையோ சித்துக்கள் உலக மட்டத்தில் உண்டு. இவை பொய்யா மெய்யா என்ற தர்க்கமும் எப்போதும் உண்டு. சாதாரண வாழ்க்கை மட்டத்தில் உள்ளதைவிட உயர்ந்த ஆன்மிக மட்டத்திலுஞ் சித்துக்களுண்டு. திருஞானசம்பந்தர்' சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற சமயாசாரியர்கள். குமரகுருபரர், கடையிற்சாமி செல்லப்பசாமி, யோகசுவாமி போல்வார் சார்பில் நிகழ்ந்தனவாக அறியப்படுஞ் சித்துக்கள் பிரபல்யமானவை. ஆனால், இவற்றில் மெய் பொய்த்தர்க்கடிகள் நிகழ்வதில்லை. இந்த இருவகைச் சித்துக்களும் மடுவுக்கும் மலைக்குமிடையிலுள்ள அளவு நேர் வித்தியாசமானவை.

லௌகிகத் தேவைகளான மண், பெண், பொன், பிள்ளை, சீனி, தேன் ஆகியவற்றை வரவழைக்குஞ் சித்துக்கள் மந்திர சக்தி, தேவதைகளின் விளையாட்டு, மனோவசிய வித்தை என்பவற்றின் விளைவுகள். இவற்றிற் சம்பந்தப்படுவோர் எப்போதும் துட்ட தேவதைகள், பிசாசுகள், ஆவிகளின் தொடர்புகளை வாலாயம் பண்ணிக்கொண்டிருப்பவர்கள். தனிப்பட்ட ஒரு பிறப்பில்தான் அத்தொடர்பு அவர்க்கு வாய்க்க வேணுமென்பதில்லை, உயிரின் நீண்ட கால வாழ்வில் முன் முன் பிறவிகளில் அதற்கிருந்த குறித்த வகையான தொடர்புகள் தனிப்பட்ட ஒரு பிறப்பில் ஒருவர் ஒரு முயற்சியும் செய்யாமலிருக்கவே, தானாக வந்து அவரை ஆட்டிப் படைக்கும். அதனால் குறிப்பிட்ட அந்த நபர் தன் வல்லமையால் அது செய்பவராக மாட்டார். சம்பந்தப்பட்ட தேவதைகளின் மூலம் அவருடைய கன்ம பாகத்துக்குத் தக்கபடி தற்செயலாய் நிகழ்வன அவை. அவற்றுக்கு ஒரு எல்லை உண்டு. எல்லை முடிவில் அது விலகியே தீரும். அச்சித்துக்கு ஆட்பட்டிருந்த காலத்தில் அவர் அது பற்றி அஹந்தை கொண்டிருப்பாரேல் அது விலகிய பிற்காலத்தில் அவர்பாடு அதோகதியாம், துஷ்டத்தனமான (பேய், பில்லி, சூனியம்) மந்திரவித்தை (Black magic) யின் பின்விளைவு போல இதுவும் பின்னுக்கு நல்லதல்ல என்பது அஸ்திகர் துணிபு. இதன் மூலம் இஷ்ட பல போகங்களைப் பெறுகின்றோம் என ஆசைப்பட்டு இதிற் போய்விழும் மற்றவர்களும் தற்போதைத் திருப்தி போக மேல் கஷ்டநிலைக்காளாவர் என்பதும் அதே ஆஸ்திகர் துணிபு.

மேற்குறித்த முதலாவது செய்தியிற் கண்ட பங்காரு அடிகளின் சித்தியும் இந்தப் பைசாச சித்தி அல்லது தேவதா சித்தியாய்த்தான் இருக்க முடியும். ஆதிபராசக்தி விக்கிரகத்தை வைத்துக் கொண்டு அவர் ஆதிபராசக்தியைத் தான் வழிபடுகிறார் என்பதற்கில்லை. யதார்த்தமான ஆதிபராசக்திதான் அவர் வாக்கில் நின்று வசனிப்பது என்பதற்குமில்லை. சைவசித்தாந்த உண்மைப்படி கண்டவர் நின்றவர் எல்லார் வாயிலும் நின்று எழுந்தமானத்துக்குப் பேசும் பொருளல்ல ஆதிபராசக்தி. இனி இவர் பார்க்கிற அதே உருவமல்ல யதார்த்தமான ஆதிபராசக்தி. அவ்வுருவத்தில் வருவிக்கும் மந்திர, கிரியா, பாவனா ரூபமான அத்தியாத்மிக சக்திதான் யதார்த்தமான ஆதிபராசக்தி. குறித்த உருவத்தில் அது இல்லை என்ற விளக்கம் மேற்காட்டிய பத்திரிகைக் கட்டுரையில் உண்டு.

ஒரு வேப்பமரம் நின்றதாம். ஒரு புயற்காற்றுக்கு அது பாறி விழுந்ததாம். அதில் ஏதோ ஒரு சுயம்பு மூர்த்தம் தோன்றியதாம். அதற்குப் பக்கத்தில் இவர்கள் ஆதி பராசக்தி விக்கிரகத்தை நிறுவினார்களாம். பங்காரு என்ற அவரே மாமிச பக்ஷணியாம். அவர் பூஜித்த அவ்வுருவத்துக்கு இப்போ சாதாரண பெண்கள் தான் பூஜை செய்கிறார்களாம். இவை எல்லாஞ் சொல்லுவதென்ன? அங்கே மந்திர கிரியா பாவனைகளுமில்லை; பிரதிஷ்டையுமில்லை; ஆவாஹனமுமில்லை; ஆகம ரீதியான பூஜையுமில்லை. ஆனால் ஏதோ நடக்கிறது. இந்நிலையில் அவ்வுருவில் ஆதிபராசக்தி குடிகொள்ள அவகாசமேயில்லை. அதேவேளை அங்கு ஒன்றுமில்லாமலுமில்லை. ஏதோ இருக்கிறது. அது எதுவாயிருக்குமென்றால் அவரை அறியாமலே அவரோடு தொடர்பாய் இருந்த ஒரு தேவதையோ அல்லது மற்றெதுவோ தானாயிருக்கும் அது. பார்க்கிறவர்கள் ஆதி பராசக்தி என்கிறார்கள். உண்மையில் அங்கிருக்கிறது வேறு.

முறையாக ஒரு தெய்வ மூர்த்தத்தைப் பிரதிஷ்டை செய்வதென்றால் சைவ பாரம்பரியத்தில் எத்தனை எத்தனை ஏற்பாடுகள், எத்தனை எத்தனை நியமங்கள்; ஆசாரங்கள்; அநுட்டானங்கள்! 'கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம்' என்று சுருக்கமாகச் சொல்லப்படும் அத்தனையும் நடைமுறையிலிருப்பதேன்? என்பதைச் சிந்திக்க வேண்டும். குறிக்கப்பட்ட மூர்த்தி தவிர வேறெந்தத் தேவதையோ பிசாசோ அதில் இடம்பெற்று விடாமல் தடுக்கும் முன்னெச்சரிக்கையான ஏற்பாடு அது. அத்தகைய கிரியையில் வாஸ்துசாந்தி, கிராமசாந்தி, பூதபலி, பூதசுத்தி என்று எத்தனை எத்தனை? எல்லாம் அதற்காகவே தான் என்ற விளக்கம் பிரதானமாக வேண்டும். நாம் எழுந்தமானத்துக்கு ஒரு கட்டடத்தைக்கட்டி விரும்பிய ஒரு மூர்த்தியை நாமே வைத்து விடுமளவில் அதே மூர்த்தி தான் அங்கிருந்து விடுமென்பது சந்தேகம். ஒன்றில் நாம் ஒரு ஞானியாயிருந்தால் அல்லது சிவாகம ரீதியாகப் பிரதிஷ்டை நிகழ்ந்திருந்தால் அப்படிச் சந்தேகங் கொள்ள இடமில்லை என்பதை அறிதல் வேண்டும். குறித்த பங்காரு அடிகள் செய்தி போன்ற எத்தனையோ செய்திகள் எங்கள் சூழல்களிலும் சிறுக மறுக உண்டு. சரியான முறையில் இவற்றை இனங்கண்டு கொள்வதால் பலவித நன்மைகள் விளைய இடமுண்டு. பொய்யை மெய்யாக நம்பி ஏமாறும் சார்பு தவிர்க்கப்படுதல் ஒன்று. சமயத் தூய்மை பழுதுறாமற் பேணுதல் ஒன்று. நம் வழிபடு தெய்வலட்சணங்கள் மாறுபடாமல் மக்கள்

நாவலர் சிலையே மீண்டும் வருக வருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசில் விளங்க வைப்பதொன்று. சமயத்தின் பேரால் வியாபாரம் நடக்கிறதென எழும் பழிச் சொல்லுக்கு இடமில்லாமற் பண்ணுவதொன்று. இயல்பிலேயே ஆசா பாச வசப்பட்ட அறிவறியா மக்கள் இவற்றின் வழிச் சென்று பிறவித் துயரை மிகுத்து உண்மையான தமது ஆன்மிக ஈடேற்றத்துக்குப் பழுது விளைக்காமற் பாதுகாப்பதொன்று. இவை அந்தன்மைகளிற் சில.

இனி, இப்படியான பைசாச, தேவதா, மந்திர வித்தைகள் தலைப்படும் பட்சத்தில் அவற்றால் பொய், புரளி, வஞ்சனை, ஏமாற்றங்களும் ஊடுருவிக் கொள்ளல் தடுக்க முடியாததாய் விடும். ஏனெனில், இவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கேற்ற ஞானவிளக்கம் இவர்களுக்கு இருக்க ஏதுவில்லை. ஞானமிருந்தால் இவர்கள் இந்த வித்தையில் ஈடுபட வேண்டியே வந்திருக்காது. அதற்குப் பதில், இவரிற் சிலர் தாம் காட்டும் வித்தையைச் சோபிக்கப் பண்ணிக் காட்ட வேண்டும்; தம் வித்தையில் ஓரளவு மயங்குஞ் சனங்களை முற்றாக மயங்கப் பண்ண வேண்டும் என்ற நப்பாசையால் உந்தப்படுவார்கள். மேற்குறித்த இரண்டில் இரண்டாவது செய்தி இதற்கு நல்ல உதாரணமாகும்.

அந்த 60 வயசு ஆசாமிக்கு மற்றவர்கள் மனநிலையை, வாழ்க்கை நிலையை விவேகித்தறியும் ஏதோ ஓரளவு சித்தி இருந்திருக்கிறது. அந்த மனோவசிய சித்தியளவில் நின்றிருந்தால் பாவாயில்லை. அவர் சீனி கொட்டும் வித்தையைக் கூட்டிக் கொண்டதனால் மாட்டிக் கொண்டவரானார். லௌகிகச் சார்பான சித்தியின் விர்த்தாந்தம் இது. இனி ஆத்மிகச் சார்பான சித்துக்களைப் பற்றிக் கவனிப்போம்.

(வளரும்)

## ஆயிரம்பனை இராசாத்திக்குப் ......

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூடு. சமீபத்தில் வெளியான, அளவெட்டி சைவ வாலிபர் சங்க அறிக்கையும் இளவாலை-மயிலங்கூடல் சைவ அபிவிருத்திச் சங்க அறிக்கையும் குரல் 4 இல் வெளிவந்துள. இளவாலை காடிவளை சைவ இளைஞர் சங்க அறிக்கையும் சிவநெறிக்கழக அறிக்கையும் நாவலர் குரலின் இவ்வொலியில் நன்றியுடன் மறுவெளியீடு செய்யப்பெறுகின்றன.

நாவலர் சிலை கட்டத்தலிற் சம்பந்தப்பட்டோருக்குச் சைவ சமூகத்தினரின் உள்ளக் குமுறலையும் அவர்களின் உண்மையான அபிலாஷைகளையும் எடுத்துணர்த்த இவ்வளவே போதும். ஆனால், இன்னுந் தான் செயற்படாதிருக்கும் அவர்கள் அசமந்தநிலை இத்தகையன தமக்கு இன்னும் வேண்டும் என்ற நிலையையே பிரதிபலிப்பதாகத் தெரிகிறது. அதனால் இவ்வகையிற் சம்பந்தப்படாதிருக்கும் தனிப்பட்ட அறிஞர்கள் அன்பர்களுஞ் சங்கங்களும் தயவு செய்து தத்தம் அறிக்கைகளை இயலுமளவு விரைவில் வெளியிட்டு வைக்குமாறு வெகு விநயத்துடன் வேண்டுகின்றோம்.

நாவலர் குரல் மேற்கொண்டிருக்கும் தர்மம் நாவலர் தர்மம். இத்தர்மம் இனிது நிறைவேற,

**நிதிமிகுத்தவர் பொற்குவை தாரீர்**
**நிதியிலாதவர் காசுகள் தாரீர்**
**அவ்விரண்டுடன் வாய்ச்சொல்லும் அருளீர்.**

## ஆன்மார்த்தமும் பரார்த்தமும்

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுமல்ல உபயகாரனும் பூஜகரே தான் என்ற விளக்கம் மகா பிரதானம். பிரதானமாக ஆலயப் பெருங் கிரியைகள் தொடங்குமுன் 'ஆசாரியவரணம்' என்ற ஒரு கிரியை இருத்தல் பிரசித்தம். சிவாசாரியரை வேண்டிக் கொள்ளுதல் என்பது இதன் அர்த்தம். தான் செய்ய வேண்டியதையே உபயகாரன் தன் இயலாமை காரணமாகச் சிவாச்சாரியரை வேண்டி அவர் மூலம் செய்து கொள்கிறான் என்ற விளக்கத்துக்கு ஆதாரமாக இருக்கிறது இந்த ஆசார்ய வரணம்.

தன் பாட்டில் கணக்குச் செய்து கொள்ள இயலாத மாணவன் ஆசிரியரை அணுகி அவர் உதவியுடன் கணக்குச் செய்து கொள்வதை ஒக்கும் இந்த விஷயம். கணக்கை ஆசிரியர் உதவியோடு செய்தாலும் அதன் சரி பிழை பற்றிய விளக்கம் தன்னில் விளங்கப் பெற்றுக் கொள்ளுமாவில் அது மாணவன் தானே செய்து கொண்டதற்குச் சரி. ஆனால் அவ் விளக்கத்துக்கு வேண்டுமளவு உளப்பண்பாடும் சிரத்தையும் மாணவனுக்கு அவசியம். உபயகாரனுக்கும் அது அவசியமாதல் சொல்ல வேண்டா.

இன்னும் கணித விஷயத்தில் மாணவன் பெறும் பேறு மாணவனுக்கும் ஆசிரியருக்கு மிடையிலான அந்நியோன்ய இணக்கத்தைப் பெரிதும் தங்கியிருக்கும். அதனால் மாணவனது கணித அறிவு நிலை மட்டத்தில் தான் நின்று அவனுக்குதவ வேண்டும் ஆசிரியர். பூஜகர், உபயகாரர் விஷயமும் இவ்வாறே. உதாரணத்துக்காக வேண்டில்,

தான் (ஒரு நாள்) உபவாசமிருந்து பூஜை முடிப்பது உபயகாரன் நிலையாயிருக்கும் பட்சத்தில் பூசகர் — தாமும் உபவாச நிலையை மேற்கொள்ள வேண்டியாகும் அல்லது அந்த இணக்கமில்லையாய்ப் பூஜைப் பேறும் நிரம்பாக் குறை ஆகும் எனலாம்.

இங்ஙனம் இப்பரார்த்த பூஜை என்பதன் அந்தரங்கச் செறிவை அறிவதுடன் அதன் அகலமளாவிய விரிவையும் அறிதல் இலாக்கியமாகும். ஒருவர் உபயகாரராகும் போது குறைந்தபட்சம் தான் ஒரு குடும்பத்தின் பிரதிநிதியாக அமைகிறார். அவ்வகையால் குடும்ப அங்கத்தினர் அனைவருமே கருத்துவகையால் அப்பூஜை செய்வோராகும் நிலை ஏற்படுகின்றது. அவர் உள்ளப் பண்பின் உயர்வையும் உண்மையையும் பொறுத்து அது ஒரு இனம், ஒரு ஊர், ஒரு தேசம், அல்லது உலகம் முழுவதையுமே பிரதிநிதிப்பதாகவும் அமைதல் கூடும். உள்ளத் துயர்வும் உண்மையும் உடையார் செய்வன அனைத்தும் உலகம் முழுவதற்குமாகவே. உலக சுபீக்ஷத்துக்குச் சைவத்தின் மஹத்தான பங்களிப்பு இதுவாகும். பூஜை முடிவில் நிகழும் ஆசீர்வாதத்தில், 'சர்வ ஜனோ சுகினோ பவந்து சர்வ மங்களானி பவந்து' எனும் வாழ்த்து இவ்வுண்மைக்கு உரைகல்லாம்.

**நாவலர் சிலையே மீண்டும் வருக வருக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் படிமம் மீள சிவநெறிக் கழகம் நேரடி நடவடிக்கை மேற்கொள்ளும்!

14 - 1 - 1986 தைப்பொங்கல் தினத்தன்று கீரிமலை சிவன் கோவில் மண்டபத்தில் நடைபெற்ற சிவநெறிக் கழகத்தின் செயலவைக் கூட்டத்திற் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:

1. 1969 ஆம் ஆண்டில் தலைநகராகிய கொழும்பில் இருந்து சமய தத்துவப் போறிஞர்கள், ஆதீனத் தலைவர்கள், சைவப் பேரன்பர்கள், அரசியற்பிரமுகர்கள், வர்த்தகப் பெருமக்கள், பொதுமக்கள் முதலிய பலரது ஒருங்கிணைந்த பெரு முயற்சியுடன் ஊர்வலமாக மிகச்சிறப்புடன் கொண்டு வரப்பட்டு நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வீதி மண்டபத்தில்நிறுவப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களுடைய திருவுருவச் சிலையை எவர்க்கும் எவ்வித அறிவித்தலுமின்றி இரவோடிரவாக அப்புறப்படுத்திய முறையைச் சிவநெறிக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.
2. அச்சிலை மீண்டும் பழைய இடத்தில் நிறுவப்பட வேண்டும் எனச் சிவநெறிக் கழகம் விரும்புகிறது.
3. இவ்வாறு மீளவும் நிறுவும் நோக்கில் ஈழத்துச் சைவத் தாபனங்கள் பலவற்றையும் ஒருங்குதிரட்டி நேரடி நடவடிக்கை மேற்கொள்வதெனச் சிவநெறிக் கழகம் தீர்மானிக்கிறது.

## சிலை கடத்திய சபையின் வருடாந்தக் கூட்டம்

### சிலை மீள முடிவு செய்வது உறுப்பினர் கடமை.

யாழ்ப்பாணத்தில் சிலை கடத்தல் அங்கீகாரத்துக்கான கூட்டத்தை நிகழ்த்தினால் 'எஜமானின்' கோரிக்கையை நிறைவேற்ற முடியாது போய்விடும் என்று அஞ்சி நாவலர் சபைக் கூட்டம் கொழும்பில் நடத்தப்பட்டது. இதனால் உறுப்பினர் பலர் அக்கூட்டத்தில் சேர்ந்து கொள்ளவில்லை. நீதியரசர் முன் நீதி குருடாக்கப்பட்டு நீதிமானின் சிலை கடத்த முடிவெடுக்கப்பட்டது.

சிலை கடத்திய சபையின் வருடாந்தக் கூட்டம் யாழ். நகரில் நடைபெற உள்ளது. நாவலர் சபையினரின் வருடாந்தக் கூட்ட அழைப்பைப் பெறும் அனைவரும் கூட்டத்துக்குச் சென்று சிலை மீண்டும் பழைய இடத்துக்கு வரவேண்டும் என்று பெரும்பான்மைப் பலத்தோடு முடிவு செய்தால் சைவ உலகம் தலை நிமிர்ந்து வாழ முடியும். நாவலர் சபையிலுள்ள நீதிமான்கள் நிமிர்ந்து நிற்க முடியும். எவ்வித பிரச்சனையுமின்றிச் சிலை மீள வர இம்முறை பெரிதும் உதவும்.

கண்காணாத இடத்தில் செத்துவிட்ட நாவலர் சபையின் நீதி மீண்டும் உயிர்க்குமா? அல்லது செத்த நீதியை நாவலர் சபை ஆழக்குழி தோண்டி நீளப் புதைக்குமா? என்பதைக் காலம் தான் முடிவு செய்யும்.

## ஈழத்தில் இந்துமத அழிப்பு அன்றும்....

பல நூற்றாண்டுகளாக இலங்கையிலே சிறப்புற்று விளங்கி வந்த இந்து சமயத்துக்கு, என்று போர்த்துக்கேயர் இந்நாட்டிலே கால் வைத்தனரோ அன்று தொடங்கியது அதன் துன்ப காலம்

போர்த்துக்கேயரும் அவருக்குப் பின் வந்த ஒல்லாந்தரும் இந்து மதத்தை இந்நாட்டிலிருந்து அழித்தொழிப்பதிலே காட்டிய வேகத்தையும் அதன் பொருட்டு அவர்கள் இழைத்த கொடுமைகளையும் நோக்கும் போது இந்துசமயம் இந்நாட்டிலே மீண்டும் ஒரு போதுமே தலையெடுக்க முடியாமல் முற்றாக அழிந்து போயிருக்குமென்றே சொல்ல வேண்டும்.

(ஆனால்) அவ்வாறு அழிந்தொழியாது தப்பிப் பிழைத்தது...

—கி. லக்ஷ்மண ஐயர்
முன்னாள் கல்விப் பணிப்பாளர்
கல்வி அமைச்சு.

## ....இன்றும்

"தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயம் தாக்குதலுக்கு இலக்கான செயல் திட்டமிட்ட (இந்து) மத விரோத நடவடிக்கையாகும்.

1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 176 இந்து ஆலயங்கள் ஈழத்தில் சேதப்படுத்தப்பட்டுள்ளன". இவ்வாறு தமிழ்ப் பாதுகாப்புப் பேரவை அறிக்கை வெளியிட்டுள்ளது.

— ஈழநாடு

இவ்விதழ் யாழ்ப்பாணம், 411/1, காங்கேசன்துறை வீதியில் இருக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிமன்றத்தினரால் யாழ்ப்பாணம், ஸ்ரீகாந்தா அச்சகத்தில் 1986-05-01 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org